O.S.50-2017

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.50/2017

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ரெங்கையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரெங்கையா | வயது | : | 88/2024 |
| தகப்பனார் பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-29.01.2024

பி.வா.சா.1

**முதல் விசாரணை**

நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியாவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1) 04.08.1985 தேதியிட்ட பாக விபர கணக்கு அசல் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பதாலும், முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதாலும் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் ஏற்புதன்மை குறித்து வழக்கின் தீர்ப்பில், Bipin Shanthilal Panchlal Vs State of Gukarat and another 2001(3) SCC Page -1 உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பிறப்பிக்கப்படும். மேற்படி ஆட்சேபணையுடன் இந்த ஆவணம் **(பி.வா.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) மனை வரி தோராய பட்டா அசல் **(பி.வா.சா.ஆ.2)**

3) வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை -5 **(பி.வா.சா.ஆ.3)**

4) மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை -2 **(பி.வா.சா.ஆ.4)**

5) 10.06.1985 தேதியிட்ட செட்டில் மெண்ட் பத்திரம் அசல் **(பி.வா.சா.ஆ.5)**

6) 03.02.2016 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் **(பி.வா.சா.ஆ.6)**

**4,5,7,8 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.